பூர்வநாட்களை நினைக்கிறேன்

I Remember the Days of Old

Album 35 Song 7



பூர்வநாட்களை நினைக்கிறேன்

Fri
DATE 11 | 05 | 2007

143 சங்கீதம்

பூர்வநாட்களை நினைக்கிறேன்
உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்
உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்
என் கைகளை உமக்கு நேராய் விரிக்கிறேன்
தாகமாய் இருக்கிறேன் ஆண்டவரே
தாகத்தைத் தீர்க்கவாரும் [illegible]

சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்கிறான்
என் பிராணனைத் தரையோடே நசுக்கிறான்
வெகுகாலத்துக்கு முன்பு மரித்தவனைப் போல
என்னை இருளில் இருக்கப் பண்ணுகிறான்
ஆபத்தில் இருக்கிறேன் ஆண்டவரே
அதிசயம் செய்திடும் அன்பு தெய்வமே

சீக்கிரமாய் எனக்குச் செவிசாய்த்திடும்
என் ஆவி என்னில் தொய்ந்து போகிறது
நான் குழியில் இறங்கும் மனுஷருக்கு ஒப்பாகாதபடி
உமது முகத்தை எனக்கு மறையாதேயும்
கதறிக்கொண்டு இருக்கிறேன் ஆண்டவரே
அற்புதம் செய்திடும் அன்பானவரே

அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும்
உம்மை நான் நம்பியிருக்கேன் வழியைக் காட்டிடும்
உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்
நீரென் புகலிடம் என் சத்துருக்களைத் தப்புவியும்
ஜெபித்துக்கொண்டு இருக்கிறேன் ஆண்டவரே
ஜெயத்தைக்கொடும் இயேசு கிறிஸ்துவே

Remnant
Tamil
Worship

KJC - DNN

DATE

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்
செம்மையான வழியில் என்னை நடத்தும்
உமது நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்
உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவைக் காத்திடும்
மன்றாடிக்கொண்டு இருக்கின்றேன் [illegible]
மகிமையாய் கேட்டிடுவீர் [illegible]

உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்திடும்
என் ஆத்துமாவை ஒடுக்குவோரை சங்காரம் பண்ணிடும்
உமது அடியேனின் விண்ணப்பங்களுக்கு செவிகொடுத்திடும்
உம்முடைய உண்மையின்படி எனக்கு உத்தரவு அருளும்
மனங்கலங்கி கேட்கிறேன் [illegible]
மனமிரங்கி எழுந்தருளும் [illegible]

How great are Your works, O Lord...
The earth is full of Your creatures...



Your faithfulness reaches to the clouds...

HALLELUJAH



AD 70–313





TRAIANVS
PETRVS
CHRISTIANI
PETRVS
PAVLVS
POLYCARPVS
DECIUS
PERPETVA ET FELICITAS